# செய்தி வெளியீடு

Ontario

**நிதி அமைச்சகம்**

## *உங்களுக்காக ஒன்ராறியோவைக் கட்டியெழுப்புதல்*

ஒன்ராறியோவின் ***2024*** *இலையுதிர்காலப் பொருளாதார அறிக்கை* தொழிலாளர்கள் மற்றும் குடும்பங்களுக்கான செலவுகளைக் குறைக்கும் அதே வேளையில் மாகாணப் பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்புவதில் தொடர்ந்து முதலீடு செய்கின்றது.

செய்திகள்

அக்டோபர் 30, 2024

ரொறன்ரோ - இன்று, நிதி அமைச்சர் Peter Bethlenfalvy *ஒன்ராறியோவின் 2024க்கான பொருளாதாரக் கண்ணோட்டம் மற்றும் நிதி மதிப்பாய்வு* ஆகியவற்றை வெளியிட்டார் *உங்களுக்காக ஒன்ராறியோவைக் கட்டியெழுப்புதல்.* வளர்ந்து வரும் நமது சமூகங்களுக்குத் தேவையான முக்கிய உட்கட்டமைப்புகளை உருவாக்கவும், போக்குவரத்து நெரிசலை குறைக்கவும், வரிகளை குறைந்த அளவில் வைத்திருப்பதன் மூலம் அதிக பணத்தை உங்கள் கையிருப்பில் இருக்கச்செய்து வாழ்க்கையை நிதி ரீதியாக கட்டுப்படுத்தவும், அரசாங்கம் பொறுப்பான நிதி மேலாண்மையைத் தொடர்ந்து வருகின்றது.

“எங்கள் அரசாங்கத்தின் பொறுப்பான அணுகுமுறை *2024 வரவுசெலவுத் திட்டத்தில்*இருந்ததிலும் பார்க்க மேம்பட்ட நிதி நிலைமையை ஏற்படுத்தியுள்ளது. அத்துடன், வரிகளைக் குறைவாக வைத்திருக்கவும், சாலைகள், நெடுஞ்சாலைகள், மருத்துவமனைகள் மற்றும் பாடசாலைகள் போன்ற உட்கட்டமைப்புகளில் முதலீடு செய்யவும் மற்றும் ஒன்ராறியோக் குடும்பங்களுக்கு உடனடியான நிவாரணம் வழங்குவதற்கும் செலவைக் குறைக்கும் எங்கள் திட்டத்தின் ஒரு பகுதியை அனுமதிக்கிறது,” என்று அமைச்சர் Bethlenfalvy கூறினார். “ஒன்ராறியோவின் வளர்ச்சியை ஆதரித்து, ஒன்ராறியோவின் பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்புவதன் மூலம், எங்கள் மாகாணத்தை வாழ்வதற்கும், வேலை செய்வதற்கும், குடும்பத்தை வளர்ப்பதற்கும் உரிய சிறந்த இடமாக மாற்றும் அதே நேரத்தில் எதிர்காலச் சந்ததியினருக்கான கடன் சுமையைக் குறைப்பதற்கும் நாங்கள் தொடர்ந்து பொறுப்புடன் முதலீடு செய்யப் போகின்றோம்."

நிச்சயமற்ற உலகளாவிய பொருளாதார நிலைமைகள் மற்றும் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட பிற தலையீடுகள் இருந்தாலும் கூட, அரசாங்கத்தின் இந்தத் திட்டம், பற்றாக்குறையைக் குறைத்து, 2026-27க்குள் வரவு செலவுத் திட்டத்தைச் சமநிலைப்படுத்துவதற்கான பாதையைத் தக்க வைத்துக் கொள்கிறது. 2024 வரவுசெலவுத் திட்டத்துடன் *ஒப்பிடுகையில்*, ஒன்ராறியோ உண்மையானமொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) மற்றும் 2024 இல் வேலைவாய்ப்பு ஆகிய இரண்டிலும் வலுவான வளர்ச்சியைக் காணும் என எதிர்பார்க்கப்படுகிறது.

*2024 இலையுதிர்காலப் பொருளாதார அறிக்கையில்* அரசாங்கம் எவ்வாறு செலவுகளைக் குறைக்கிறது என்பதற்கான சிறப்பம்சங்களில் அடங்குபவை:

- அடுத்த ஆண்டு தொடக்கத்தில் வரி செலுத்துவோர் தள்ளுபடியாக $200 தொகையை வழங்குதல், இது அதிக வட்டி விகிதங்கள் மற்றும் மத்திய அரசின் கார்பன் வரியை (federal carbon tax) எதிர்கொள்ளும் ஒன்ராறியோக் குடும்பங்களுக்கு உடனடி நிவாரணம் வழங்கும். இந்த முன்மொழியப்பட்ட $200 வரி செலுத்துவோர் தள்ளுபடியானது, டிசம்பர் 31, 2024க்குள் தமது 2023ம் ஆண்டு வருமான வரி மற்றும் பலன்களைத் தாக்கல் செய்த, ஒன்ராறியோவில் உள்ள தகுதியுள்ள அனைத்துப் பெரியவர்களுக்கும் அனுப்பப்படும். தகுதியுள்ள குடும்பங்கள் 18 வயதுக்குட்பட்ட ஒவ்வொரு பிள்ளைக்கும் $200 தொகையை மேலதிகமாகப் பெற்றுக் கொள்வார்கள்.

- ஜூன் 30, 2025 வரைக்கும் பெட்ரோல் மற்றும் எரிபொருள் (டீசல்) மீதான வரி விகிதம் லிட்டருக்கு 9 சதங்களாக இருக்கும் வகையில் தற்காலிக எரிவாயு வரி மற்றும் எரிபொருள் வரி விகிதக் குறைப்புகளை மேலும் நீட்டிக்க முன்மொழிதல். ஜூலை 2022இல் தொடங்கி மூன்று ஆண்டுகளில் இது ஒன்ராறியோக் குடும்பங்களுக்குச் சராசரியாக $380 தொகையைச் சேமித்துக் கொடுக்கும். மத்திய அரசின் கார்பன் வரி ஏப்ரல் 1, 2025 அன்று மீண்டும் அதிகரிக்கப்படவுள்ளதால் இந்த நிவாரணம் மிகவும் முக்கியமானது.

- தாம் பட்டம் பெற்றவுடன், நோயாளிகளின் முழுமையான பட்டியலுடன் குடும்ப மருத்துவம் செய்ய உறுதி பூண்டுள்ள, தகுதியான 1,360 இளங்கலை மாணவர்களுக்கான Learn and Stay மானியங்களை விரிவுபடுத்துவதற்காக, அரசாங்கம் சுமார் $88 மில்லியனை 2026 முதல் மூன்று ஆண்டுகளில் முதலீடு செய்கின்றது. இதில் 2026–27 கல்வியாண்டுக்கான $17.7 மில்லியன் தொகையும் அடங்கும். சராசரியாகக் குடும்ப மருத்துவர்களுடன் இணைக்கும் விகிதங்களின் அடிப்படையில், மேலதிகமாக 1.36 மில்லியன் மக்களை முதன்மையான மருத்துவப் பராமரிப்புடன் இணைப்பதற்கு, இந்த மொத்த முதலீடு உதவும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த நிதியுதவியானது, ஒன்ராறியோ முழுவதிலும் உள்ள எந்தவொரு சமூகத்திலும் ஒரு மருத்துவராகச் சேவை செய்யும் காலத்திற்குத் தேவைப்படும், கல்வி மற்றும் புத்தகங்கள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் போன்ற பிற நேரடிக் கல்விச் செலவுகளை அனைத்தையும் உள்ளடக்கும்.

- கருவுறுதலுக்கான சிகிச்சையை நாடும் குடும்பங்களுக்கான அணுகலை விரிவுபடுத்துதல் 2025-26 இல் தொடங்கி, ஒன்ராறியோவின் கருவுறுதல் திட்டத்தை (OFP - Ontario Fertility Program) விரிவுபடுத்துவதற்காக அரசாங்கம் இரண்டு ஆண்டுகளில் $150 மில்லியனைக் கூடுதலாக முதலீடு செய்யும். இந்த நிதியுதவியானது அரசாங்கத்தால் நிதியளிக்கப்படும் சோதனைக் கருத்தரித்தல் (IVF - vitro fertilization) சுழற்சியைப் பெறக்கூடிய தனிநபர்களின் எண்ணிக்கையைக் கிட்டத்தட்ட மூன்று மடங்காக அதிகரிக்கும், இது கருவுறுதலுக்கு உதவும் சிகிச்சையகங்களின் திறனை அதிகரிக்கிறது மற்றும் மருத்துவமனைகள் மற்றும் சமூக அமைப்புகளின் காத்திருப்புப் பட்டியலைக் குறைக்கும். 2025ம் ஆண்டில், புதிய வரிக் கடன் மூலம் கருவுறுதல் சிகிச்சையை நாடும் குடும்பங்களுக்கு அரசாங்கம் கூடுதல் ஆதரவை அறிமுகப்படுத்தும், இது ஒன்ராறியோக் குடியிருப்பாளர்களுக்கான தகுதியான கருவுறுதல் சிகிச்சைச் செலவுகளில் 25 சதவீதம் வரை, ஆண்டுக்கு அதிகபட்சமாக $5,000 வரையிலான உதவியை வழங்கும். இதில் IVF சுழற்சிகள், கருவுறுதல் மருந்துகள், சிகிச்சைக்கான பயணம் மற்றும் நோயறிதல் சோதனை ஆகியவை அடங்கும். மூன்று வருடங்களில் இந்த முயற்சிக்காக $115 மில்லியன் தொகையை அரசாங்கம் ஒதுக்குகின்றது.

- ஒன்ராறியோவின் பங்காள நகரங்களுக்கான நிதியுதவியை (OMPF - Ontario Municipal Partnership Fund) - மாகாணத்தின் நகராட்சிகளுக்கான முக்கிய பொது உதவி மானியம் - அடுத்த இரண்டு ஆண்டுகளில் $100 மில்லியனாக அதிகரித்தல், இந்தத் திட்டத்தின் மூலம் வழங்கப்படும் மொத்த நிதியை 2026 ஆம் ஆண்டுக்குள் $600 மில்லியனாகக் கொண்டு வரும். 2025ம் ஆண்டில், OMPF க்கு உடனடியாக வழங்கப்படும் $50 மில்லியன் அதிகரிப்பால் நகராட்சிகள் பயனடையும்.

"ஒன்ராறியோவின் பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்புவதற்கான எங்கள் திட்டத்தை நாங்கள் வழங்குகின்றோம், ஒன்ராறியோத் தொழிலாளர்களுக்குச் சிறந்த வேலைகள் மற்றும் பெரிய சம்பளக் காசோலைகளை உருவாக்குகிறோம், அதே நேரத்தில் குடும்பங்கள் மற்றும் வணிகங்களுக்கான செலவுகளைக் குறைக்கிறோம்," என்று அமைச்சர் Bethlenfalvy கூறினார். "தொழிலாளர்கள், குடும்பங்கள் மற்றும் நகராட்சிகளுக்கு நாங்கள் ஆதரவளித்து வருகின்றோம், வரவிருக்கும் பல ஆண்டுகளுக்கு வலுவான சமூகங்கள் மற்றும் சிறந்த வாய்ப்புகளை உருவாக்குவதற்காக அவர்களின் வெற்றியில் முதலீடு செய்கின்றோம்."

## *விரைவுச் செய்திகள்*

- அரசாங்கம் இப்போது 2024-25இல் $6.6 பில்லியன் பற்றாக்குறையைக் கணித்துள்ளது - *2024 வரவுசெலவுத் திட்டத்தில்* வெளியிடப்பட்ட கண்ணோட்டத்தில் இருந்து $3.2 பில்லியன் தொகை முன்னேற்றம். இது புதுப்பிக்கப்பட்ட பொருளாதார மற்றும் வருவாய்த் தகவல்களையும், அண்மைக்காலத்தில் ஏற்படக்கூடிய அபாயங்களைக் குறைப்பதற்கான உயரிய சாத்தியக்கூறுகளையும் பிரதிபலிக்கிறது.

- நடுத்தர காலத்தில், அரசாங்கம் 2025–26ல் $1.5 பில்லியன் பற்றாக்குறையையும், அதைத் தொடர்ந்து 2026–27ல் $0.9 பில்லியனையும் உபரியாகக் கணக்கிடுகிறது.

- 2024–25க்கான ஒன்ராறியோவின் நிகர கடன்-மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதம் (debt-to-GDP ratio) 37.8 சதவீதமாக இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.  நடுத்தர காலத்தில், நிகர கடன்-மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதம் 2025–26இல் 37.9 சதவீதமாகவும், 2026–27இல் 37.5 சதவீதமாகவும் இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

- ஒன்ராறியோவின் வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த உட்கட்டமைப்பு முதலீட்டில், போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், வீட்டுவசதியைச்-செயல்படுத்தும் உட்கட்டமைப்பு, மருத்துவமனைகள், பாடசாலைகள், நீண்ட காலப் பராமரிப்பக வசதிகள் மற்றும் பிற முக்கியமான பொது உட்கட்டமைப்புகளை உருவாக்குவதற்கும் மேம்படுத்துவதற்கும் என அடுத்த பத்தாண்டுகளில் வழங்கப்படும் $191 பில்லியனுக்கும் அதிகமான தொகை உள்ளடங்கும்.

- நவம்பர் 14, 2024 அன்று, அரசாங்கம் இந்த*2025 வரவுசெலவுத் திட்டத்தைத்* தெரிவிப்பதற்கும், வாழ்க்கையை மிகவும் கட்டுப்படியானதாக ஆக்குவது, அதிக வீடுகள், பாடசாலைகளைக் கட்டுவது மற்றும் ஒன்ராறியோத் தொழிலாளர்களுக்கு நல்ல வேலைகளை உருவாக்குவது போன்ற இன்றைய மிக முக்கியமான சவால்களைப் பற்றி ஒன்ராறியோ வாசிகளிடமிருந்து அறிந்துகொள்வதற்கும் உரிய ஆலோசனைகளைத் தொடங்கும்.

## மேலதிக வளங்கள்

வாசிக்கவும் *ஒன்ராறியோவின் 2024க்கான பொருளாதாரக் கண்ணோட்டம் மற்றும் நிதி மதிப்பாய்வு — உங்களுக்காக ஒன்ராறியோவைக் கட்டியெழுப்புதல்*

வாசிக்கவும் *உங்களுக்காக ஒன்ராறியோவைக் கட்டியெழுப்புதலின் சிறப்பம்சங்கள்*

வாசிக்கவும் *பின்புலம் (Backgrounder): பொருளாதார மற்றும் நிதிக் கண்ணோட்டம்*

வாசிக்கவும் *2024 வரவுசெலவுத் திட்டம்: சிறந்ததொரு ஒன்ராறியோவைக் கட்டியெழுப்புதல்*

## ஊடகத் தொடர்புகள்

Ontario.ca/finance-news

Disponible en français

Colin Blachar
அமைச்சர் அலுவலகம்
416-325-0400
Colin.Blachar@ontario.ca

Scott Blodgett
தகவற் தொடர்புப் பிரிவு
416-728-9791
Scott.Blodgett@ontario.ca